**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 47** **நாள் : 08.03.2025**

**சர்வதேச மகளிர் தின விழா மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைபெற்றது**

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் சர்வதேச மகளிர் தின விழா மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தலைமையில் ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் இன்று (08.03.2025) நடைபெற்றது.

இவ்விழாவில் பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் அவர்கள் பங்கேற்று, பல்வேறு துறைகளில் சிறப்பாகப் பணியாற்றிய 20 மகளிர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மகளிர் சாதனையாளர் விருதுகளை வழங்கிப் பாராட்டினார். மேலும் சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு, மகளிர் அலுவலர்களுக்கிடையே நடைபெற்ற கோலப்போட்டி (ரங்கோலி), கவிதைப் போட்டி, இசை நாற்காலி போட்டி, ஊமை நாடகங்கள் (Dump Charades), புனைவுரு ஆடைப் போட்டி (Fancy Dress Competition) உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மகளிருக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை மாண்புமிகு மேயர் அவர்கள் வழங்கினார்.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது :**

இந்த விழாவிற்கு வருகைபுரிந்துள்ள அனைத்து மகளிருக்கும் மகளிர் தின நல்வாழ்த்துகள். கலைநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பெண்களின் வாழ்க்கை நிலையை சிறப்பாக நடித்துக் காட்டி, பெண் குழந்தைகளின் முக்கியத்துவத்தை உணர்த்திய மாணவர்களுக்கு வாழ்த்துகள். முன்பெல்லாம் ஒரு பெண் குழந்தை பிறந்தால் எதிர்வினை இருந்து வந்தது. ஆனால் தற்போது அந்த நிலை மாறி ஒரு பெண் குழந்தை பிறந்தால் வரவேற்கக்கூடிய சூழ்நிலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் ஏற்படுத்தியுள்ளார்கள்.

அன்றைய காலக்கட்டத்தில் இருந்த நிலை தற்போது மாறியுள்ளது. தமிழ்நாட்டில் பெண்களுக்கு முக்கியத்துவம், பாதுகாப்பு மற்றும் உரிமை கொடுக்கக்கூடிய ஒரு அரசை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடத்தி வருகிறார்கள்.

பெண்களுக்கு கல்வி என்பது மிகவும் முக்கியமான ஒன்று. ஒரு நதி எதற்காகவும், யாருக்காகவும், எந்த ஒரு சூழ்நிலைக்காகவும் நிற்காது. அதை முடக்கி சுவர் எழுப்பி தடுத்தாலும், ஒரு நிலையில் அதை உடைத்து வெளியேறும். அதேபோல, பெண்களுடைய வாழ்க்கையிலும் எத்தனை தடுப்புச் சுவர்கள் இருந்தாலும், அத்தனையும் உடைத்து தகர்த்தெறிந்து மேலே வர வேண்டும். மேலே வந்தால் தான் நம்முடைய இலக்கை அடைய முடியும். நாம் நினைப்பது எதுவோ அதை சாதிக்க முடியும்.

நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வி பயிலும் மாணவியர், கல்லூரி பயிலும் மாணவியர், சுயஉதவிக் குழுக்கள் உள்ளிட்ட அனைவரையும் அங்கீகரிக்கும் வகையில் பெண்கள் சாதிப்பதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

நம்முடைய மாநகராட்சியில் பெண் ஊழியர்கள் பலர் பணிபுரிகின்றனர். மழைக்காலங்களில் இரவு நேரங்களில் ஆணுக்கு இணையாக பெண் அலுவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர். பெண் அலுவலர்கள் இரவு நேரங்களில் பணிபுரிந்து பாதுகாப்பாக வீட்டிற்கு செல்கிறார்கள் என்றால் நம்முடைய தமிழ்நாட்டில் பாதுகாப்பு சிறப்பாக உள்ளது.

பெண் குழந்தைகளுக்கு படிப்பு என்பது மிகவும் முக்கியம். பெற்றோர்கள் குழந்தைகளை படிக்க வைக்க வேண்டும். குழந்தைகள் படிப்பதற்கு அனைத்து வசதிகளையும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. ஆண்களும், பெண்களும் ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருந்து செயல்பட்டால் தான் இந்த சமுதாயத்தில் அனைத்திலும் வளர்ச்சி அடைய முடியும். நம் வீட்டில் உள்ள சின்ன ஆண் குழந்தைகளிடம் பெண் குழந்தைகளை எப்படி மதிக்க வேண்டும். எப்படி நடத்த வேண்டும் என்பதை சிறு பருவத்திலிருந்தே சொல்லி வளர்க்க வேண்டும். அதேபோல பெண் குழந்தைகளுக்கும் சிறு வயதிலிருந்தே அனைத்தையும் சொல்லி கொடுத்து வளர்க்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் மகளிர் அலுவலர்கள், பணியாளர்களின் கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

இந்நிகழ்ச்சியில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு. மு. மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, இ.ஆ.ப., துணை ஆணையாளர்கள் திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., (தெற்கு வட்டாரம்), திரு.கே.ஜெ. பிரவீன் குமார், இ.ஆ.ப., (மத்திய வட்டாரம்), திரு. கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு வட்டாரம்), நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன், மாநகர மருத்துவ அலுவலர் டாக்டர் எஸ். பானுமதி, மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**